முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1235

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.02.2023, புதன்கிழமை

1. ஆறுமுக எந்தன் அவதாரமான
   அண்ணலே அரங்கமகா ஞானியே
   மாறுதலை செய்து கலியுகத்தை
   மகத்துவமிக்க ஞானயுகமாக மாற்றுவேன் என
2. என அவதாரம் புரிந்த தேசிகனே
   இனிதே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   ஞான அறிவுரை ஆசி தன்னை
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 03 ம் நாள், 15.02.2023 புதன்கிழமை)
   நாட்டிடுவேன் உன் சக்தி இன்னும் பெருக
3. பெருகவே உந்தனுள் யானிருந்து
   பிரம்ம சூட்சுமங்கள் பலவற்றை
   வரமாக நித்தம்நித்தம் வழங்கிவர
   வருங்காலம் உன் தொண்டர்படை மூலம்தான்
4. ஆகவே மாற்றம் இனிதே காணும்
   அரங்கன் நீ விரும்புகின்ற மாந்தருக்கே
   ஆற்றல்பெருகி ஞானத்தலைமை தனை
   அறிவிப்பேன் உலகில் நிலைநிறுத்த சக்தி கூடும்
5. கூடவே இந்தவித அற்புதத்தை குருஅரங்கன் உன்அவதாரம் கொண்டு
   குருபரன் ஆறுமுகன் யான் நடத்த இருக்க
   வருமுலகில் உலகோர் இந்த சூட்சுமம் அறிந்து
   வையகத்தில் உன்னை குருவாக ஏற்று
6. ஏற்று முருகாஅரங்கா என விளம்பி
   என்னாளும் ஜெபதபம் இனிதே செய்து
   ஆற்றல்பட உன்பால் தீட்சை பெற்று
   அரங்கன் நீ தரும் அருளமுது உண்டு
7. உண்டுமே அன்னதான சேவைதனை
   உலகமெங்கும் செய்துகொண்டு வருதல் காண
   கண்டடையும் இந்த உலகம் ஞான யுகமாற்றம்
   கலியுகத்தில் உன்னால் இந்த அற்புதம் நிகழுமப்பா
8. நிகழவே நின்னுள் நான் இருக்கின்றேன்
   நிலைத்தன்மை உன்வழி வருபவர்க்கு தீட்சையாக
   அண்ணலாக அறமாக இரங்கி யானே
   அற்புதத்தை உலகமெங்கம் நடத்தி மகிழ்விப்பேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–